# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

### பிரிவு 1 ( 2018 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 6 )

### மனனப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

**காவல் தூதருக்கு செபம்**

எனக்கு காவலாயிருக்கிற இறைவனின் தூதரே, இறையருளால் உம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட எனக்கு இறை ஒளியைத் தந்து, என்னைத் தீமைகள் அனைத்திலிருந்தும் காத்து நடத்தி ஆண்டருளும். ஆமென்.

### பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

மாசில்லா கன்னியே
மாதாவே உன்மேல்
நேசமில்லாதவர்
நீசரே யாவார்
வாழ்க வாழ்க வாழ்க மரியே - 2

மூதாதை தாயார் செய்
முற்பாவ மற்றாய்
ஆதியில்லாதோனை
மாதே நீ பெற்றாய்
ஆவே ஆவே ஆவே மரியே - 2

அருள் நிறைந்த மாதாவே
ஆண்டவர் உம்முடனே
பெண்களுக்குள்ளே
பேறுபெற்றாயே
வாழ்க வாழ்க வாழ்க மரியே - 2